# பாடம் 58: நற்செய்தி பரப்பல்

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பல பாடங்களில், கடவுளையும் அடுத்துள்ளவரையும் அன்பு செய்ய அழைக்கப் பெற்றுள்ள கத்தோலிக்கரிடம் எதிர்பார்க்கப்படும் அறநெறி வாழ்வு குறித்து நாம் கற்றோம். எனினும், நமக்கு நாமே நல்ல கிறிஸ்தவர்களாக வாழ்ந்தால் மட்டும் போதாது, உலகில் உள்ள மற்ற மக்களிடம் இந்த விசுவாசத்திற்கு ஆர்வத்தோடு சான்றுபகர வேண்டும். அடுத்த சில பாடங்களில், சமூகத்துக்கு இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைக் கொணரும் நமது கடமை பற்றி கண்டறிவோம், இந்த அலுவல் “நற்செய்தி பரப்பல்” என்று அழைக்கப்படுகிறது. இந்த பாடத்தில் நற்செய்தி பரப்பல் என்பதன் பொருள் என்னவென்று கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. “நற்செய்தி” எனும் சொல் நல்ல செய்தி என்று பொருள்படும் கிரேக்கச் சொல்லான *எவாங்கேலியோன்* அல்லது லத்தீன் சொல்லான *எவாஞ்செலியும்* என்பதில் இருந்து வருகிறது. நற்செய்தி பரப்பல் என்பது கடவுளின் மீட்புச் செயல் குறித்த நல்ல செய்தியை மற்ற மக்களுக்கு கொண்டு சேர்க்கிறதாகும். இது, உண்மையில், இயேசு தமது தூய கத்தோலிக்க திருச்சபையிடம் ஒப்படைத்த முக்கிய அலுவலாக இருக்கிறது.

*மத்தேயு 28:18-20*: “இயேசு வந்து அவர்களிடம் பேசினார். அவர் கூறியது, ‘விண்ணத்திலும் மண்ணகத்திலும் எனக்கு எல்லா அதிகாரமும் தரப்பட்டுள்ளது. ஆகவே, சென்று, எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் அவர்களுக்கு திருமுழுக்கு வழங்கி, நான் உங்களுக்கு வழங்கிய எல்லா கட்டளைகளையும் கடைபிடிக்கக் கற்பியுங்கள். இதோ, நான் எப்பொழுதும் உங்களுடன் இருக்கிறேன்; ஆம், காலத்தின் முடிவு வரை.’”

2. எல்லா கிறிஸ்தவ மக்களும், நமது திருமுழுக்கு மற்றும் உறுதிபூசுதலின் பேற்றினால், உலகிற்கு நற்செய்தி பரப்பும் திருச்சபையின் இந்த எய்துபணியில் நாம் பங்கேற்பது அவசியமாயுள்ளது. சமூகத்திற்கும் அதன் தனித்தனி உறுப்பினர்களுக்கும் கிறிஸ்துவை அறிமுகம் செய்வதால் நாம் நற்செய்தியைப் பரப்புகிறோம்.

*கதிம 905*: “பொதுநிலையினரும் ‘சொல்லாலும் வாழ்வின் சாட்சியத்தாலும் கிறிஸ்துவை அறிவிக்கின்ற’ நற்செய்தி பரப்பலால் தங்களது இறைவாக்கினருக்குரிய எய்துபணியை நிறைவேற்றுகின்றனர்.”

*எவாஞ்செலீ நுந்தியாந்தி*, 22: “நற்செய்தி பரப்பல் என்பது இயேசுவின் நற்செய்தியை ஒவ்வொரு மனிதச் சூழலுக்குள் கொணர்ந்து, நற்செய்தியின் சொந்த இறை வல்லமையால்

தனிநபர்களையும் சமூகத்தையும் மனந்திருப்ப நாடுவதாகும். இயேசு கிறிஸ்துவில் மீட்பை அறிவித்தலும், அதற்கு ஒரு நபர் விசுவாசத்துடன் பதிலிறுத்தலும் அதன் சாரமாக உள்ளன, இவை இரண்டுமே கடவுளின் ஆவியாரின் செயல்கள். அது எப்பொழுதும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன. 'கடவுளின் மகனான நாசரேத்து இயேசுவின் பெயர், போதனை, வாழ்வு, வாக்குறுதிகள், அரசு மற்றும் மறைபொருள் ஆகியவை அறிவிக்கப்படவில்லை என்றால், அங்கு உண்மை நற்செய்தி பரப்பல் இல்லை.'''

3. அறிவியல் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் சமூகம் நவீனமாகத் தொடங்கியதால், உலகில் நற்செய்தி பரப்புவதில் உள்ள சவால் மிகமிகச் சிக்கலாக மாறியுள்ளது. இதன் காரணமாக, இந்த புதிய சவாலை திருத்தந்தை புனித 6ம் பவுல், *எவாஞ்செலீ நுந்தியாந்தி* எனும் தமது திருத்தூதரிய ஊக்கவுரையில் ஒரு பதத்தால் விவரிக்கிறார்: ''புதிய நற்செய்தி பரப்பல்''. பின்பு திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுலும் இதை அடிக்கடி, சிறப்பாக நவீன காலத்தில் நற்செய்தி பரப்பும் திருச்சபையின் எய்துபணி குறித்த படிப்பினைகளை வழங்கும் *ரெதெம்ப்தோரிஸ் மிசியோ* எனும் தமது சுற்றுமடலில் பயன்படுத்தினார்.

4. புதிய நற்செய்தி பரப்பல் என்பதற்கு, உலகிற்கு ''புதியதொரு செய்தியை'' வழங்குதல் என்பது பொருளன்று. திருச்சபையின் மீட்புச் செய்தியின் உள்ளடக்கம் புதிதாக இருக்க முடியாது, ஏனெனில் அது எப்பொழுதும் உலகின் மீட்பிற்காக இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை எடுத்துரைக்கிறதாக இருக்கிறது. மாறாக, புதிய நற்செய்தி பரப்பல் என்பது முற்காலச் செய்தியை புதிய உற்சாகத்துடன், புதிய முறைகளில், புதிய மொழிவுகளில் எடுத்துரைப்பதாகும். இதில் புதியது என்னவெனில், நற்செய்தியின் செய்தியை இன்றைய மக்கள் புரிந்துகொள்கின்ற மற்றும் அவர்களின் பண்பாடு, மொழி, மற்றும் மனநிலையில் ஊடுருவுகின்ற விதத்தில் வழங்குவதாகும்.

5. நற்செய்தி பரப்பலானது திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்ட மிக முக்கிய அலுவல் என்கிற காரணத்தால், நமது திருத்தந்தையர் அதற்கு மிகுந்த அழுத்தம் கொடுத்துள்ளனர். 2010ல், திருத்தந்தை 16ம் பெனடிக்ட் புதிய நற்செய்தி பரப்பலை ஊக்குவிக்க திருத்தந்தைசார் மன்றத்தை நிறுவினார். இந்த நவீன உலகில் நற்செய்தி பரப்பும் திருச்சபையின் மிக முக்கிய எய்துபணிக்கு கூடுதல் அழுத்தம் கொடுக்க *எவாஞ்செலீ கவ்தியும்* (நற்செய்தியின் மகிழ்ச்சி) எனும் தமது திருத்தூதரிய ஊக்கவுரையை திருத்தந்தை பிரான்சிஸ் 2013ல் வெளியிட்டார். ''கிறிஸ்தவ விசுவாசிகள் நற்செய்தி பரப்பலில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்க'' (*எவாஞ்செலீ கவ்தியும்*, 1) திருத்தந்தை அதில் அழைப்பு விடுத்தார்.

6. மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா அடங்கிய மேற்கில் தற்போது என்ன நிகழ்கிறது என்றால், சமயமற்ற மக்கள் அதிகரித்து வருகின்றனர், நற்செய்தி பரப்பும் திருச்சபையின் உறுப்பினர்களின் முயற்சிகளுக்குப் பொருந்தாத விதத்தில் சமூகப் பண்பாடு மேலும் மேலும் சமயச் சார்பற்றதாக மாறி வருகிறது என்று நாம் கூறலாம். இதன் காரணமாக மேற்கில்

உள்ள திருச்சபை தனது எண்ணிக்கை, தனது விசுவாசம், தனது நம்பகத்தன்மை, மற்றும் சமூகத்தில் தனது செல்வாக்கு ஆகியவற்றில் மிகவும் வலுவிழந்து வருகிறது.

7. புதிய நற்செய்தி பரப்பலில் கவனம் செலுத்துகிற இந்த உச்சநிலை கடமையில், உலகில் உள்ள திருச்சபையின் எய்துபணியில் பங்கேற்பது ஒரு சிறப்புரிமையாக மட்டுமன்றி, எல்லா கிறிஸ்தவர்களுக்கும் ஒரு கடமையாகவும் இருக்கிறது.

கடந்த காலத்தில், நற்செய்தி பரப்பல் என்பது திருநிலையினர் மற்றும் துறவறத்தார் போன்ற திருச்சபையின் சில "தேர்ந்தெடுக்கப்பட்டோரின்" பொறுப்பு என்று மக்கள் நினைத்தனர். அக்காலத்தில், "பொதுநிலை எய்துபணியாளர்" என்ற பதமும் இல்லாதிருந்தது. நற்செய்தி பரப்பல் என்பது ஒரு சிறப்பு வேலை போன்றிருந்தது. ஆகவே, திருச்சபையின் எய்துபணியில் பங்கேற்பதற்கான இந்த அழைப்பு இறைமக்கள் எல்லாருக்கும் உரியது என்பது தெளிவு படுத்தப்பட வேண்டும்.

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 2: "...எய்துபணி செயல்பாடு என்பது எல்லா கிறிஸ்தவர்களுக்கும், எல்லா மறைமாவட்டங்கள் மற்றும் பங்குதளங்களுக்கும், திருச்சபை நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கும் உரியது என்ற ஒரு புதிய விழிப்புணர்வு இருக்கிறது."

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 3: "நற்செய்தியை விதைப்பதற்கு மிக முழுமையாகத் தயாரான தொடுஎல்லைகளைத் திருச்சபையின் முன்பாக கடவுள் திறந்து கொண்டிருக்கிறார். புதிய நற்செய்தி பரப்பல் மற்றும் *மக்களினத்தாருக்கான* எய்துபணிக்குத் திருச்சபையின் ஆற்றல்கள் எல்லாவற்றையும் அர்ப்பணிக்கும் தருணம் வந்துவிட்டதாக நான் உணர்கிறேன். கிறிஸ்துவில் நம்பிக்கையுள்ள எவரும், திருச்சபையின் எந்த நிறுவனமும் இந்த உச்சக் கடமையைத் தவிர்க்க முடியாது: எல்லா மக்களுக்கும் கிறிஸ்துவை அறிவித்தல்."

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 71: "*மக்களினத்தாருக்கான* எய்துபணியானது முழு இறைமக்கள் மீதும் இருக்கிறது. இங்கு ஒரு புதிய திருச்சபையின் அடித்தளத்திற்கு நற்கருணை வேண்டும், ஆகபே பல்வேறு பரந்த விதங்களில் மேற்கொள்ளப்படும் குருத்துவத் திருப்பணி, எய்துபணி திருப்பணி ஆகியவை எல்லா கிறிஸ்தவ விசுவாசிகளின் அலுவலாக இருக்கிறது."

தூய கத்தோலிக்க திருச்சபையில் இருந்து வரும் இந்த கட்டளையை ஒவ்வோர் உறுப்பினரும் செவிமடுப்பதும், புரிந்துகொள்வதும், தழுவிக்கொள்வதும் மற்றும் அதை வாழ்வதும் தேவை! நற்செய்தி பரப்பலுக்கான அழைப்பு திருச்சபையிடம் இருந்து போதுமான அளவுக்கு அடிக்கடி கேட்பதாகத் தெரியவில்லை. அது கேட்கின்ற இடத்திலும், நற்செய்தி பரப்பலின் பொருள் போதுமான அளவுக்குத் தெளிவாக வரையறுக்கப்படாததால், தங்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை மக்கள் புரிந்து கொள்வதில்லை.

8. பல கத்தோலிக்கர்கள் (திருநிலையினரும் பொதுநிலையினரும்) திருச்சபையின் இந்த பணியை நற்செய்தியைச் சார்ந்து அன்றி, படிமை, திருவழிபாட்டு, அல்லது மேய்ப்பு சார்ந்த விதத்தில் வரையறுக்கும் தவறைச் செய்கின்றனர். இன்னும், நற்செய்தி பரப்பல் செயல்பாடு திருச்சபையின் உள்ளார்ந்த அடையாளமாக இருக்கிறது; திருச்சபையாக இருக்க நற்செய்தி பரப்ப வேண்டும், அதனுள் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் வாழ்வின் ஒரு வழியாக இந்த கட்டளையில் பங்கேற்க வேண்டும்.

*எவாஞ்செலீ நுந்தியாந்தி*, 14: "'எல்லா மக்களிடமும் நற்செய்தி பரப்புகின்றத் திருச்சபையின் இன்றியமையாத எய்துபணி அலுவலை மீண்டும் ஒருமுறை நாம் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.' இன்றைய சமூகத்தின் பரந்த, ஆழமான மாற்றங்களை உருவாக்கும் இந்த எய்துபணி அலுவல் மிக அவசரமானது. நற்செய்தி பரப்புவது உண்மையில் திருச்சபையின் அருளாகவும் அழைத்தலாகவும், அதன் ஆழ்ந்த அடையாளமாகவும் இருக்கிறது. நற்செய்தி பரப்புவதற்காகவே திருச்சபை இருக்கிறது..."

9. திருச்சபைகளில் உள்ள ஒவ்வொரு நபரும், தமது தனிப்பட்ட அழைத்தலுக்கு ஏற்ப, நற்செய்தி பரப்பலுக்கான அழைப்பில் ஒரு குறிப்பிட்ட வகிநிலையைக் கொண்டுள்ளார் என்று *ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*வில் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் அறிவுறுத்துகிறார். இந்த பல்வேறு அழைத்தல்கள் அடிப்படையில், திருச்சபையின் எய்துபணியில் குறிப்பிட்ட விதங்களில் பங்கேற்பதில் வேறுபாடுகள் இருக்கின்றன:

அ) **ஆயர்கள்**, பேதுருவின் வழிவருகிறவரின் (திருத்தந்தை) தலைமையில் இயங்குகின்ற இவர்கள், ஏற்கெனவே மனந்திரும்பிய ஆனால் கிறிஸ்தவரல்லாதோராக இருக்கிறவர்களுக்கான நற்செய்தி பரப்பல் பணிக்கு முதன்மைப் பொறுப்பாளர்களாக இருக்கின்றனர் (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 63).

ஆ) **குருக்கள்**, "ஆயர்களின் உடனுழைப்பாளர்கள்" என்ற முறையில், "திருச்சபை மற்றும் உலகின் தேவைகளுக்கு, தங்கள் பகுதியில் உள்ள கிறிஸ்தவரல்லாத குழுக்களுக்கும் கூட திறந்தவர்களாக" இருக்கிறது தேவையாகிறது (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 67).

இ) **(நிரந்தர) திருத்தொண்டர்கள்**, திருத்தந்தை 2ம் யோவான் பவுலால் "புதிய நற்செய்தி பரப்பலின் திருத்தூதர்கள்" என்று அழைக்கப்படுகின்றனர் (நிரந்தர திருத்தொண்டர்களுடனான யூபிலி, ரோமை, 18-20 பிப்ரவரி 2000). இது ஏனெனில், ஒருபுறம் அவர்கள் பிறரன்பு பணிகள், போதித்தல் மற்றும் கற்பித்தல், திருச்சபையின் செபம் மற்றும் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர், மறுபுறம், தங்களது மதச்சார்பற்றப் பணியால் உலகோடு இணைந்துள்ளனர்.

ஈ) **துறவறத்தார்** "தங்கள் நிறுவனத்திற்குப் பொருத்தமான விதத்தில், எய்துபணி செயலில் சிறப்பு பங்கு வகிக்கும் கடமையைக் கொண்டுள்ளனர்" (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 69). அவர்கள் ஆழ்தியான வாழ்வு வாழ்ந்தால், அவர்களின் இருப்பு "கிறிஸ்தவரல்லாதோர் நடுவே கடவுளின் மேன்மைக்கும் அன்புக்கும் மாட்சிமிகு சாட்சியைக் கொணரும்". அவர்கள் செயல்முறை வாழ்வு வாழ்ந்தால், அவர்கள் "கடவுளின் அரசை விரிவாக்குவதற்காக... தம்மை

கடவுளுக்கு முழு கொடையாக அளிப்பதிலும், கிறிஸ்துவின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி மனிதத்திற்கும் சமூகத்திற்கும் பணியாற்ற முற்றும் தயாராய் இருப்பதிலும் தங்கள் செயலைப் பரந்ததாக்க வேண்டும்''.

உ) **பொதுநிலையினர்**, ''தங்களது சார்பற்றப் பண்பால்... 'உலகுசார் செயல்களில் ஈடுபட்டு, இவற்றை கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்துவதன் வழியாக கடவுளின் அரசை நாட'' அழைக்கப்பட்டுள்ளனர் (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 71). ''பொதுநிலையினர் இருக்கின்ற வட்டத்தில், எய்துபணியாளர்களாகச் செயல்படுவது மிக விரிந்ததாக இருக்கிறது. 'அவர்களது களம்...' தலநிலை, தேசிய மற்றும் நாடுகளிடை மட்டங்களில் 'அரசியல், சமூக, மற்றும் பொருளாதாரத்தின் பரந்த, சிக்கலான உலகமாக இருக்கிறது'. திருச்சபைக்குள், பல்வேறு வகையான தொண்டுகள், செயல்பாடுகள், திருப்பணிகள் மற்றும் கிறிஸ்தவ வாழ்வை ஊக்குவிக்கும் வழிகள் இருக்கின்றன. அண்மை காலங்களில் பல ஆலயங்களில் காணப்படும் புதிய முன்னேற்றமாக, எய்துபணி தீவிரம் நிறைந்த 'திருச்சபை இயக்கங்களின் விரைவான வளர்ச்சியை எனது நினைவுக்கு கொணர்கிறேன்'' (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 72).

10. நற்செய்தி பரப்பலானது இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி அறிவித்தலை உள்ளடக்கியது.

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 44: ''கிறிஸ்துவின் வெளிப்படையான கட்டளையைத் திருச்சபை தவிர்க்கவோ, கடவுளால் அன்பு செய்யவும் மீட்கவும் பெறுகின்ற 'நற்செய்தி'யின் ஆடவரையும் பெண்டிரையும் இழக்கவோ முடியாது. 'நற்செய்தி பரப்பல் எப்பொழுதும் -- அடித்தளமாகவும், மையமாகவும், அதே நேரத்தில் அதன் இயங்கலின் உச்சமாகவும் -- கொண்டிருக்கிற ஒரு தெளிவான அறிவிப்பு, இயேசு கிறிஸ்துவில்... கடவுளின் அருள் மற்றும் இரக்கத்தின் கொடையாக, எல்லா மக்களுக்கும் மீட்பு வழங்கப்படுகிறது.'''

இயேசு கிறிஸ்துவை அறிவித்தல் என்பதற்கு மக்களுக்கு கோட்பாட்டைக் கற்பிக்கிறதை விட மேலானது நற்செய்தி பரப்பலில் அடங்கியுள்ளது என்று பொருள். இதற்கு இயேசு என்ற நபருடன் மக்கள் தனிப்பட்ட மற்றும் ஆழ்ந்த சந்திப்புகளை மேற்கொள்வது தேவையாகிறது. இது நமக்கு மிக முக்கியமான நினைவூட்டலாக இருக்கிறது. முற்காலத் திருச்சபையைப் போன்று, திருத்தூதரிய வழிவருதல், திருச்சபைத் தந்தையர், திருவழிபாடு, மற்றும் நமது விசுவாசத்தின் மற்ற அம்சங்கள் மீதான நமது அறிவுசார் படிப்பினைகள் மற்றும் நுண்ணறிவு மீதான கவனத்தில் அடிக்கடி ஒரு சோதனை எழுகிறது. எனினும், நமது விசுவாசத்தின் இந்த அம்சங்களை கிறிஸ்துவைச் சந்திக்க மக்களை ஈர்க்கின்ற விதங்களில் வெளிப்படுத்தவில்லை என்றால், நாம் பயனுள்ள விதத்தில் நற்செய்தி பரப்புகிறதில்லை.

11. திருச்சபையிலும் உலகிலும் என்ன நடக்கிறது என்பதில் கவனமாயிருக்க நற்செய்தி பரப்பல் நமக்குத் தேவையாகிறது. உலகெங்கும், மூன்று விதமான சூழல்களில் நற்செய்தி பரப்பல் நடைபெறுகிறது (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 34):

அ) **நற்செய்தி அறிப்படாத** இடங்கள். அத்தகைய இடங்களில், நாம் ‘‘நற்செய்தியை போதித்து, ஆலயங்கள் இல்லாத மக்கள் அல்லது குழுமங்கள் நடுவே புதிய ஆலயங்களை நிறுவ வேண்டும்’’;

ஆ) **திருச்சபை ஏற்கெனவே இருக்கின்ற** மற்றும் நலமான, முதிர்ச்சியுள்ள கிறிஸ்தவர்கள் சிறப்பான கத்தோலிக்க வாழ்வை வாழுகின்ற இடங்கள், அங்கு திருச்சபை மேய்ப்புசார் அக்கறையை வழங்குகிறது;

இ) ‘‘திருமுழுக்கு பெற்ற குழுமங்கள் முழுவதும் **விசுவாசத்தின் வாழும் உணர்வை இழந்துள்ள**, அல்லது தங்களை இனிமேல் திருச்சபையின் உறுப்பினர்களாகக் கருதாத, மேலும் கிறிஸ்து மற்றும் அவரது நற்செய்தியில் இருந்து விலகிய வாழ்வு வாழுகின்ற’’ மற்றும் ‘‘மறு நற்செய்தி பரப்பல்’’ தேவைப்படுகின்ற இடங்கள்.

12. நற்செய்தி பரப்பலுக்கு குறிப்பிட்ட இடங்களின் மக்கள் பண்பாட்டுக்குள் திருச்சபை தன்னை நுழைப்பது தேவையாகிறது. மக்களின் பண்பாடுகளுக்குள் திருச்சபை தன்னை நுழைத்துக்கொள்ளும் நீண்டச் செயல்மை ‘‘பண்பாட்டு மயமாக்கல்’’ என்று அழைக்கப்படுகிறது (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 52).

திருச்சபை தன்னை மக்களின் பண்பாட்டுக்குள் நுழைப்பது தேவையாகிறது, அதனால் நற்செய்தியை அறியாத மக்கள் அதை ‘‘வேற்றதாக’’ புறக்கணிக்க மாட்டார்கள். அது ‘‘வேறுபட்டப் பண்பாடுகளில் நற்செய்தி உடலெடுக்கச் செய்கிறது’’, அதனால் அந்த பண்பாட்டிற்குள் உள்ள மக்களால் நற்செய்தி ஏற்கப்படும், அவர்கள் இறுதியாகத் திருச்சபை குழுமத்திற்கு அறிமுகமாவார்கள் (*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 52). இதைப் பரவலாகத் தெளிவுபடுத்த, திருச்சபை நற்செய்தியின் செய்தியைப் பாதுகாத்து, மக்கள் புரிந்துகொள்கிற மற்றும் இணைந்திருக்கிற விதத்தில் அதைத் தழுவிப் பரப்புகிறது. இவ்விதமாக, திருச்சபை மற்றும் அது நற்செய்தி அறிவிக்கும் மக்களுக்கு இடையே உயிருள்ள பரிமாற்றம் நிகழ்கிறது.

13. திருச்சபையின் தொடக்க நாள்களில் இருந்தே, அது யூதப் பண்பாட்டில் இருந்து கிரேக்க உலகின் (பிறவினத்தார்) பண்பாட்டிற்கு மாறியது தொடங்கி, திருச்சபை பல பண்பாடுகள் மற்றும் நாகரிகங்களுக்குள் தன்னை நுழைத்துக் கொண்டுள்ளது. 20ஆம் நூற்றாண்டில், நவீன உலகின் உலகமயமாக்கலில் பண்பாட்டுச் சந்திப்புகள் அதிகம் சிக்கலாகி வருகின்றன. முன்னிகழாத அறிவியல் வளர்ச்சியோடு, முதலாளித்துவப் பொருளாதாரங்கள், நகர்மயமாக்கல், மற்றும் தொழில்மயமாக்கலால், திருச்சபை மீண்டும் ஒருமுறை பண்பாட்டுமயமாக்கல் சவாலை எதிர்கொள்கிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் *கவ்தியும் எத் ஸ்பெஸ்* (நவீன உலகில் திருச்சபை பற்றிய மேய்ப்புசார் விதியாக்கம்’’)-ல் இதை விவாதித்தது. திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் கூறியது, ‘‘பண்பாடு மற்றும் விசுவாசத்துக்கு இடையிலான சேர்க்கை பண்பாட்டுக்கு மட்டுமன்று, விசுவாசத்துக்கும் வேண்டியதாகிறது... பண்பாடாக மாறாத விசுவாசம்

முழுமையாக ஏற்கப்படுவதோ, முழுவதும் பிரதிபலிக்கப்படுவதோ, அல்லது நம்பகமாக அனுபவிக்கப்படுவதோ இல்லை'' (முவிமென்டோ எக்லேசியலே டி இம்பெக்னோ கல்சுரலே-ன் தேசிய காங்கிரஸ் பங்கேற்பாளர்களுக்கானப் பேச்சு, 16 ஜனவரி 1982).

14. எனினும், பண்பாட்டுமயமாக்கல் நடைமுறையில் திருச்சபை முன்மதியுடனும் இருக்க வேண்டும். திருச்சபை தன்னை நுழைத்துக்கொள்ள முயற்சிக்கும் பண்பாட்டில், தனது நற்செய்தி மற்றும் திருத்தூதரிய மரபின் மாறுதலை அனுமதிக்கக்கூடாது. எந்த பண்பாட்டிலும் உண்மை மற்றும் தூயநிலையையே மதிக்க வேண்டும் என்பதால், நற்செய்தியின் செய்தியைத் திரிக்கின்ற அல்லது சமரசம் செய்கின்ற பண்பாடுகளின் கூறுகளை நாம் புறக்கணிக்க வேண்டும் என்று பொருளன்று. எந்த அளவுக்கு பண்பாட்டுமயமாக்கல் நடைபெற வேண்டும் என்பதற்கு ஒரு வரம்பு இருக்கிறது, மேலும் எந்த பண்பாடும் அறுதியானது என்று கருதப்படக் கூடாது. நற்செய்தியின் செய்தி பண்பாட்டின் இயங்குமுறைகளுக்கு ஏற்ப மாறுதலடைய அனுமதிக்கப்படுகின்ற மற்றும் அதன் அதிகாரப்பூர்வ சாரத்தைப் பாதுகாக்காத பொழுது, இது ''ஒருவயமாதல்'' என்று அழைக்கப்படுகிறது (பன்னாட்டு இறையியல் பணிக்குழு, *விசுவாசம் மற்றும் பண்பாட்டுமயமாக்கல்*, 1988).

ஒரு குறிப்பிட்டப் பண்பாட்டுக்கு நற்செய்தி எவ்வளவு ஏற்புடையதாக இருந்தாலும், அதைப் பெறுகின்ற மக்களால் அதன் அதிகாரப்பூர்வச் செய்தி எதிர்க்கப்படாது என்பதற்கு உறுதிப்பாடு இல்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். மேலுமாக, இந்த நற்செய்தி ஒரு காலத்தில் ''யூதர்களுக்கு தடைக்கல்லாகவும் பிறவினத்தாருக்கு மடைமையாகவும்'' இருந்தது (1கொரி 1:23).

15. பண்பாட்டுமயமாக்கல் குறித்து சுருங்கக் கூறினால், மக்களின் பண்பாட்டுக்கு இயல்பான விதத்தில் நற்செய்தி மொழியப்பட வேண்டும். எனினும், மக்களின் பண்பாட்டில் நற்செய்திக்கு ஒவ்வாத அம்சங்கள் இருந்தால், பண்பாட்டால் அது திரிக்கப்படாமல், நற்செய்தியால் பண்பாடு மாற்றப்பட வேண்டும். இதன் காரணமாகவே பண்பாட்டுமயமாக்கல் என்பது ''மெதுவானப் பயணமாக'' நடைபெற வேண்டியச் செயல், விசுவாசக் குழுமத்திற்குள்ளும் மற்றவர்கள் மீதும் செயற்கை வேகத்தோடோ அல்லது வல்லாண்மையிலோ திணிக்கக்கூடாது என்று திருச்சபை கற்பிக்கிறது.

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 54: ''...பண்பாட்டில் இருந்து விலகியிருக்கும் வடிவில் இருந்து பண்பாட்டை மிகைமதிப்பீடு செய்வதற்கு திறனாய்வின்றி கடந்துசெல்லும் ஆபத்து இருக்கிறது. பண்பாடு என்பது மனிதரின் படைப்பாக இருக்கிறதால், பாவக் குறியீட்டுடன் இருக்கிறது, அது 'நலமாக்க, மேன்மையாக்க மற்றும் நேர்த்தியாக்கப்படுவது' தேவையாகிறது.''

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 54: ''பண்பாட்டுமயமாக்கலில் சில வல்லுநர்களை மட்டுமின்றி, இறைமக்கள் அனைவரையும் ஈடுபடுத்த வேண்டும், ஏனெனில் ஒருபோதும் தனது பார்வையை

இழக்காத அதிகாரப்பூர்வ *விசுவாச உணர்வை* (சென்சுஸ் பீதெய்) மக்கள் பிரதிபலிக்கின்றனர் ...இந்த விதத்தில் கிறிஸ்தவக் குழுமத்தின் அனுபவத்தின் மெய்யான வெளிப்பாடாக இந்த வகை செயல்மை படிப்படியாக நடைபெற வேண்டும். பண்பாட்டுமயமாக்கலுக்கு வழிகாட்டலும் ஊக்குவிப்பும் தேவை, வற்புறுத்தல் கூடாது, அதனால் கிறிஸ்தவர்கள் நடுவே எதிர்மறை மீள்வினைகள் எழக்கூடும். இது குழுமத்திற்கும் பக்குவம் அடைந்த, குழும வாழ்வின் ஒரு வெளிப்பாடாக இருக்க வேண்டும், தனித்த ஆய்வின் விளைவாக இருக்கக்கூடாது.''

16. மக்கள் நற்செய்தி மற்றும் புகுமுக அருளடையாளங்களைப் பெற்றதும் நற்செய்தி பரப்பல் நிற்கக்கூடாது. தகுந்த விசுவாச அறிவுறுத்தல் இன்றி, அருளடையாளங்கள் மட்டுமே, கத்தோலிக்க வாழ்வுக்குப் போதுமானதல்ல. இயேசு தம் திருத்தூதர்களுக்கு, ''... எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் அவர்களுக்கு திருமுழுக்கு வழங்குங்கள்' என்று மட்டுமன்றி, ''நான் உங்களுக்கு வழங்கிய எல்லா கட்டளைகளையும் கடைபிடிக்கக் கற்பியுங்கள்'' என்றும் கட்டளையிட்டார் (மத் 28:18-20). ஆகவே, இந்த அருளடையாளங்களைப் பெற்றவர்களும் தொடர்ந்து கிறிஸ்தவ வாழ்வில் மூழ்கியிருக்க வேண்டும், அதனால் அவை அவர்கள் வாழ்வின் வழியில் கத்தோலிக்க மனதை உருவாக்கும். இதன் பொருள் கத்தோலிக்க விசுவாசம் குறித்த மறைக்கல்வி அறிவுறுத்தல் எல்லா விசுவாசிகளுக்கும் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட வேண்டும். கற்பித்தல் மற்றும் உருவாக்கலின் இந்த திருப்பணி மரபில் ''மறைக்கற்பித்தல்'' என்று சுட்டப்படுகிறது.

*மறைக்கற்பித்தலுக்கான பொது கையேடு*, 105: ''மறைக்கற்பித்தல் என்பது கிறிஸ்தவக் குழுமம் பெற்றுக்கொண்ட, புரிந்துகொள்கிற, கொண்டாடுகிற, வாழுகிற மற்றும் பல விதங்களில் தொடர்புகொள்கிற விதத்தில், நற்செய்தியைக் கடத்துகின்ற செயல்மையைத் தவிர வேறன்று.''

மறைக்கற்பித்தல் வழியாக, ''இயேசு கிறிஸ்துவுடனான ஒன்றிப்பில் மக்களை வைக்க'' திருச்சபை அழைக்கப்படுகிறது (கதிம 426). சமய அறிவை மட்டும் கற்பிக்கிறதைத் தாண்டி, நம்பிக்கையாளர்கள் இயேசு கிறிஸ்துவை சந்திக்கவும், அவரால் தொடர்ந்து உருமாற்றப் படவும் உதவுவதும் மறைக்கற்பித்தலில் அடங்கியுள்ளது. இது நம்பிக்கையாளர்களைச் சீடர்களாக மாற்றுகிறது. தகுந்த மறைக்கற்பித்தல் இன்றி, உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பை மட்டுமே திருச்சபை காணும், சீடர்களின் அதிகரிப்பை அன்று. இந்த பிரச்சனை இன்றளவும் இருந்து வருகிறது, திருச்சபையில் அருளடையாளம் பெற்ற நற்செய்தி பெறாத உறுப்பினர்களின் ஒரு படை இருக்கிறது.

17. வெளிப்படையாக அதிகப் பணி செய்யப்பட வேண்டியுள்ளது, நாம் இந்த அலுவலை நிறைவு செய்வதில் இருந்து தொலைவில் இருக்கிறதாகத் தெரிகிறது. ஆனால் இன்னும், இந்த அலுவலை நிறைவேற்ற திருச்சபை உறுப்பினர்கள் பலருக்கும் உற்சாகம் குறைவுபடுவதாகத் தெரிவது ஏன்?

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 36: "…எய்துபணி அலுவல் மீதான ஆர்வம் குறைவுபட மிகத் தீவிரக் காரணங்களில் ஒன்றாக விரிந்து பரவியுள்ள கண்டுகொள்ளாமை இருக்கிறது, அது கிறிஸ்தவர்கள் நடுவிலும் காணப்படுவது, கூறுவதற்கு வருத்தமளிக்கிறது. இது 'ஒரு சமயம் மற்றதைப் போன்றே நல்லது' என்ற நம்பிக்கைக்கு இட்டுச் செல்லும் சமயச் சார்புவாதத்தால் உருவாகும் தவறான இறையியல் நோக்குகளின் அடிப்படையிலானதாக இருக்கிறது."

திருச்சபையின் எய்துபணியை பல்வேறு திருப்பணிகள் மற்றும் நற்செய்திப் பணிகள் வழியாக நாம் செயல்படுத்தும் விதத்தைத் திருச்சபையின் தலைவர்கள், மறைக்கற்பிப்போர், மற்றும் பெற்றோர்கள் மறுஆய்வு செய்வது முக்கியமாக இருக்கிறது. நாம் வாழுகின்ற விதத்தின் வழியாக, இந்த உலகில் எய்துபணியாளர்களாக இருக்கின்ற கடமையை நாம் கவனத்தில் கொண்டு, எல்லாவற்றிலும் முதலாவதாக, மனித சமூகத்தின் நிலையில் அக்கறை கொண்டும், நற்செய்தியின் ஆற்றலோடு மனித சமூகத்தின் உருமாற்றத்தில் உறுதியாகப் பங்கேற்க நடவடிக்கை எடுத்தும், எல்லா இறைமக்களுக்கும், சிறப்பாக இளையோருக்கு, தெளிவான சமிக்ஞைகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. இருந்தாலும், நாம் நற்செய்தியைக் கொண்டு உலகை மாற்றுவதை விட, உலகால் மாற்றமடைவது ஒருகால் அதிகம் நிகழ்கிறது.

18. நாம் அழைக்கப்பட்டுள்ளது எய்துபணியாளர்களாக இருக்க! இதன் பொருள் கிறிஸ்துவில் நமது வாழ்வைக் கண்டு, நாம் வாழுகின்ற விதத்தின் வழியாக, சொல்லிலும் செயலிலும் கிறிஸ்துவை அறியச் செய்வதாகும். இதற்கு நாம் கிறிஸ்து மற்றும் அவரது திருச்சபையுடன் நெருங்கிய உறவுநிலை கொண்டிருக்கிறதும், நமது வாழ்வில் ஒவ்வொரு நாளும் தூய ஆவியாரின் செயல்பாட்டுக்குப் பணிந்திருக்கிறதும் அவசியம். கிறிஸ்து மற்றும் நற்செய்தியை நோக்கிய இந்த நம்பிக்கைப் பயணம், நற்செய்தியை நமது வாழ்வில் ஊடுருவச் செய்து நம்மை உருமாற்றுகிறது, அதனால் நாம் அதை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்யலாம், அவர்களும் அதைச் சந்தித்து அதனால் உருமாற்றம் அடைவர். மற்ற வார்த்தைகளில், ஒரு எய்துபணியாளராக இருக்கத் தேவைப்படுவது தூயநிலை. இது ஏனெனில் நமது வாழ்வின் முயற்சிகள் மற்றும் தொடர்ந்த உருமாற்றத்தின் துணையோடு, தூயவராக இருக்கின்ற ஆசை இல்லாமல், நற்செய்தியின் நம்பகமான சாட்சிகளாக இருக்க இயலாது. எனவே, தூயவராக இருப்பதற்கான அழைப்பும், எய்துபணியாளராக இருப்பதற்கான அழைப்பும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 90: "எய்துபணிக்கான அழைப்பு, அதன் இயல்பை, தூயநிலைக்கான அழைப்பிலிருந்து பெறுகிறது. ஓர் எய்துபணியாளர் தம்மைத் தூயநிலையின் வழியில் அர்ப்பணித்தால் மட்டுமே மெய்யாக அத்தகையவராக இருக்கிறார்: 'திருச்சபையில் மீட்பின் எய்துபணியை நிறைவேற்றும் ஒவ்வொருவருக்கும் அடிப்படை முற்கோள் மற்றும் மாற்றவியலாத நிபந்தனையாக தூயநிலை அழைக்கப்பட வேண்டும்.' …தூயநிலைக்கான உலகளாவிய அழைப்பானது எய்துபணிக்கான உலகளாவிய அழைப்புடன் நெருக்கமாக இணைந்துள்ளது. விசுவாசிகளின் ஒவ்வொரு உறுப்பினரும் தூயநிலைக்கும் எய்துபணிக்கும்

அழைக்கப்பட்டுள்ளனர்... திருச்சபையின் எய்துபணி ஆன்மிகம் தூயநிலையை நோக்கிய ஒரு பயணமாக இருக்கிறது.''

*ரெதெம்ப்தோரிஸ் மிசியோ*, 91: ''எய்துபணியாளர் என்பவர் பேறுகள் கொண்ட ஒரு நபராக இருக்கிறார்... பேறுகளை வாழ்வதில், எய்துபணியாளர் கடவுளின் அரசு ஏற்கெனவே வந்து விட்டதை ஏற்றுக்கொண்டு, அனுபவித்து, உறுதியாகக் காட்டுகிறார். விசுவாசத்தில் இருந்து வரும் அகமகிழ்வே ஒவ்வோர் அதிகாரப்பூர்வ எய்துபணியாளர் வாழ்வின் பண்பாக இருக்கிறது. மிகப்பல பிரச்சனைகளால் நொறுக்கவும் ஒடுக்கவும் படுகின்ற ஓர் உலகில், மருள்நோக்கால் சோதிக்கப்படும் ஓர் உலகில், 'நற்செய்தி' அறிவிக்கின்ற ஒருவர், கிறிஸ்துவில் உண்மை எதிர்நோக்கைக் காணும் ஒரு நபராக இருக்க வேண்டும்.''

19. திருச்சபையின் எய்துபணி தளர்ந்த கத்தோலிக்கரின் வெளிப்படலில் உச்சம்பெறக் கூடாது. திருச்சபையின் எய்துபணி முயற்சியில் இருந்து பல்வேறு ஆக்கப்பூர்வமான விதங்களில் மண்ணகத்தின் எல்லைகளுக்கு நற்செய்தியைக் கொணரும் உற்சாகமுள்ள சீடர்களைத் துளிர்க்கச் செய்ய வேண்டும். நாம் ஒவ்வொருவரும் கொண்டுள்ள சிறப்புத் திறன்களை *அத் ஜெந்தெஸ்* (எல்லா மக்களினங்களுக்கான) எய்துபணியில் பங்கேற்கப் பயன்படுத்தலாம், மேலும் நாம் மிகுந்த விடாமுயற்சி மற்றும் உற்சாகத்தோடு அவ்வாறு செய்ய வேண்டுமென எதிர்பாக்கப்படுகிறோம்.